**கன்னிவாடி பேரூராட்சி செயல்அலுவலர் அவர்களின் செயல்முறைகள்**
**முன்னிலை திரு. அ.பாலசுந்தர்,.**

---

**ந.க.எண். 44 / 2024** **நாள். 27.06.2024**

**பொருள் :** மனைப்பிரிவு - திருப்பூர் மாவட்டம் - கன்னிவாடி பேரூராட்சி - கன்னிவாடி கிராமம் - புலஎண். **902/4, 902/5C2** -ல் **8720** ச.மீ பரப்பளவில் 33 மனைகளுடன் அமைந்துள்ள மனை பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கி உத்திரவிடப்படுகிறது.

**பார்வை :**

1. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருப்பூர் அவர்களின் தொழில் நுட்ப அனுமதி ஆணை ந.க.எண். **ISKF709E/2022/TCP** நாள்.**24.03.2023**
2. மூலனூர் சார்பதிவாளர் அலுவலக ஆவணம் எண். **611/ BK1/ 2023** மற்றும் **612/ BK1/ 2023**நாள். **06.03.2023** இன்படி பெறப்பட்ட நன்கொடை ஆவணங்கள்.
3. தெருவிளக்குகளுடன் கூடிய மின்கம்பம் அமைக்கப்பட்ட மின்வாரிய இரசீது எண் **CBU373RS1D248** நாள் **16.06.2023** மற்றும் **PGCAXU526656853** நாள் **12.05.2023**
4. அரசாணை எண் 141 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை (யுடி4/1) நாள் 16.07.2022
5. இப்பேரூராட்சி மன்ற தீர்மான எண். 53 / 2024 நாள். 18.06.2024.
6. திரும்ப பெறக்கூடிய வைப்புத் தொகை ரூ. 250000/- இரசீது எண். 07 / 2024-25 நாள். 27.06.2024
7. தொடர்புடைய ஆவணங்கள்.

---

**ஆணை**

திருப்பூர் மாவட்டம், கன்னிவாடி பேரூராட்சிக்குட்பட்ட கன்னிவாடி கிராமம் புல எண். **902/4, 902/5C2**-ல் **8720** ச.மீ பரப்பில் 33 எண்ணம் மனைகள் கொண்ட மனைபிரிவிற்கு பார்வை 1 இன்படி தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி, இம்மனைப்பிரிவிற்கு சாலை, வடிகால், உள்ளிட்ட அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும் 2661 ச.மீ பரப்பளவில் சாலைகள், ஒதுக்கப்பட்டு பூங்கா பரப்பு 605.85 ச.மீ-க்கு ஈடாக அரசு வழிகாட்டி மதிப்பு ரூ. 266596/- அரசு கணக்கு தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளது. பொது உபயோகமாக உள்ளாட்சி அமைப்பிற்கு ஒதுக்கப்பட்டது 30.29 ச.மீ பரப்பளவு நிலம் மற்றும் மின்வாரியத்திற்கு ஒதுக்கப்பட்டது 35.15 ச.மீ ஆகியன பார்வை 2 இன்படி பத்திர பதிவு செய்து ஒப்படைக்கப்பட்டுள்ளன. மேலும் மேற்படி மனைப்பிரிவில் செயல் அலுவலர் பெயரில் தெருமின் விளக்குகள் அமைக்கப்பட்டு மின் இணைப்பும் பெறப்பட்டுள்ளது. இவற்றின் அடிப்படையில் இம்மனைப்பிரிவிற்கு இப்பேரூராட்சி மன்றம் பார்வை 5இல் கண்ட தீர்மானம் வாயிலாக அங்கீகாரம் அளித்துள்ளது.

பார்வை 4 அரசாணையின் அடிப்படையில் அடிப்படை வசதிகளின் பராமரிப்பிற்காக திரும்ப செலுத்தத்தக்க வகையில் வைப்புத் தொகை ரூ. 250000/- (ரூபாய் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மற்றும் கூர்ந்தாய்வு கட்டணம் ரூ. 33000/- (ரூபாய் முப்பத்து மூன்றாயிரம் மட்டும்) மற்றும் காலிமனைவரி ரூ. 103180/- (ரூபாய் ஒரு இலட்சத்து மூன்றாயிரத்து நூற்று எண்பது மட்டும்) மொத்தம் ரூ. 386180/- (ரூபாய் மூன்று இலட்சத்து எண்பத்து ஆறாயிரத்து நூற்று எண்பது மட்டும்) வங்கி வரைவோலையாக பார்வை 6 இன்படிசெலுத்தப்பட்டுள்ளது

எனவே மேற்படி மனைபிரிவிற்கு பார்வை 1 இல் கண்ட நகர் ஊரமைப்புத் துறையின் தொழில்நுட்ப அனுமதி ஆணையில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் ஆகியவற்றுடன் மனைகளில் 60% மனைகளின் விற்பனை அல்லது ஐந்து ஆண்டுகள் இவற்றில் எது பிந்தையதோ அது வரை மேற்படி மனைப்பிரிவில் தங்களால் ஏற்படுத்தப்பட்டுள்ள அடிப்படை வசதிகள் அனைத்தும் தங்களது சொந்த பராமரிப்பில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற நிபந்தனையோடு மேற்படி மனைப்பிரிவிற்கான இறுதி ஒப்புதல் இதன் மூலம் வழங்கி உத்திரவிடப்படுகிறது.

இத்துடன் நகர் ஊரமைப்பு துறையால் இணையவழி அங்கீகரிக்கப்பட்ட மனைபிரிவு வரைபடம் ஒன்று மற்றும் பார்வை 1 இல் கண்ட ஆணை நகல் ஒன்று ஆகியன இணைக்கப் பட்டுள்ளன.

**இணைப்பு :**

1. பார்வை 1 ஆணை நகல்
2. வரைபடம் நகல்

செயல் அலுவலர்
கன்னிவாடி பேரூராட்சி
திருப்பூர் மாவட்டம்

**பெறுதல்.**

திரு. சண்முகம்,
த/பெ ஆண்டிவேல்,
லட்சுமி நயக்கன் வலசு,
ஆனங்கூர்.

**நகல்.**

1. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், திருப்பூர் .
2. உதவி இயக்குனர், நில அளவை பதிவேடுகள் துறை, திருப்பூர் - 641 604
3. சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், மூலனூர்